## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தமிழ்செல்வன் | நாள் | 24.11.2022 |
| தகப்பனார் பெயர் | வரதராஜன் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

20) நான் எந்தெந்த சர்வே எண்கள் தொடர்பாக தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சர்வே எண்.362/2 மற்றும் ச.எண்.362/3 ஆகிய சர்வே எண்கள் குறித்துதான் தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

21) சர்வே எண்.362/2 ல் ஒரு அய்யனார் கோவில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி அய்யனார் கோவில் உள்ள சங்கதியை நான் என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி அய்யனார் கோவில் சர்வே எண்.362/2 ல் உள்ள சங்கதியை வேண்டும் என்றே மறைத்து தாக்கல் செய்துள்ளதால் நான் சரியான சொத்து விவரத்தை குறிப்பிடாத காரணத்தினால் என் வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்றால், சரியல்ல.

22) என் தந்தை கடந்த 26.11.2020 ம் தேதியில் இறந்தார். இறந்த என் தந்தையை எங்களது நிலத்தில்தான் நல்லடக்கம் செய்துள்ளோம் என்றால், சரிதான். அவ்வாறு என் தந்தையின் உடலை எங்களது பட்டா நிலத்தில் அடக்கம் செய்தது சட்டத்துக்கு புறம்பானது என்றால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.